07.03.2026

CC.3/2012

PW–1, மெர்சி அண்ணபூரணி

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.A.Socialogy and Master in MWS Studies, M.Com படித்துள்ளேன். எனக்கு தமிழ் ஆங்கிலம் சரளமாக எழுதப்படிக்க தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரானது இந்த வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இதுவும் ஒன்று. இந்த புகாரை தவிர வேறு எந்த புகாரும் 1 முதல் 4 எதிரிகள் மீது இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. இதற்கு முன்பும் 1 , 2 எதிரிகள் மீதோ மற்ற எதிரிகள் மீதோ மற்ற வழக்குகள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் ஞாபகம் இல்லை. என் மீது 1ம் எதிரி புகார் கொடுத்து CC.26/2001 மற்றும் CC.256/2003 என்ற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் CC.26/2001 வழக்கு மட்டும் நடைபெற்று முடிவுற்றது. மற்றொரு வழக்கும் எனக்கு நடந்ததாக ஞாபகம் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.3,4 ல் குத்தகை சம்பந்தமான ஆவணங்கள் அடிப்படையில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.3 , 4ல் ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் யாரால் எப்போது சங்கத்துக்காக வாங்கப்பட்டது தெரியுமா என்றால் 1969 ம் ஆண்டு திரு.தங்கமணி நாடார் தலைவர் தமிழ்நாடு சமூக சேவா சங்கம், என்பவரால் சங்கத்திற்காக வாங்கப்பட்டது. 1969 ம் ஆண்டு ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் 1ம் எதிரியாகிய திரு.ராமசாமி என்பவர் என்னிடம் காண்பித்தார். அந்த ஆவணத்தில் உள்ள சர்வே எண். 4 மால் விஷ்திரணம் எனக்கு தெரியுமா என்றால் ஆவணத்தை பார்த்தால் தெரியும். அந்த ஆவணத்தில் கட்டுப்பட்ட இடத்தில் எவ்வளவு கட்டுமானங்கள் எவ்வளவு விஷ்திரணம் உள்ளது என்றால் 1 ஏக்கரில் கள்ளிக்குடி தாலுகா பிட்.1ல் 1 ஏக்கரில் 2 கட்டிடங்கள், இந்த கட்டிடங்களும் மினிஸ்டரி ஆப் வெல்பர் பண்டிங்

உதவியுடன் 2013ம் ஆண்டு 13 லட்ச ரூபாய் நிதி பெற்று கட்டப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.3 ஆவணம் 23.11.2010 ம் தேதி எழுதப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.4 ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டுள்ளது என்றால் 10.01.2011ம் தேதி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 ஆவணங்களும் குத்தகை ஆவணங்கள் என்றால் 99 வது ஆண்டுகளுக்கான குத்தகை ஆவணங்கள் என்றால் சரிதான். ஏற்கனவே இந்த வழக்கு சம்பந்தமாக 16 ஆவணங்கள் குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நான் 16 ஆவணங்கள் மூலமாக எனது புகாரிலோ கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லவில்லை என்று சொன்னால் படித்து பார்த்து தான் சொல்லமுடியும். எனக்கு கிரையம், ஒத்தி, குத்தகை, அடமானம் உயில் அது பற்றிய விபரங்கள் எனக்கு வேறுபாடு தெரியும் என்றால் சரிதான்.

குத்தகை மூலம் உரிமைமாற்றம் ஏற்படாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 3 மற்றும் 4 வது எதிரிகளுக்கு அ.சா.ஆ 3 மற்றும் 4 மூலம் உரிமம் மாற்றம் ஏற்படவில்லை என்று சொன்னால் அதுபற்றி தெரியாது. தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தின் துணை விதிகளை தெரியுமா என்றால் தெரியும். தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தின் பைலா விதி 5 ன் படி ஒரு சங்கம் செயல்பட இயலாத நிலையில் அதுபோன்று செயல்படக்கூடிய சங்கத்திற்கோ அல்லது டிரஸ்டிற்கோ அதுபோன்ற செயல்களை செயல்படுத்த எழுதிக்கொடுக்கலாம், அல்லது அரசாங்கத்திடம் ஒப்படைக்கலாம் என்று விதி குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சங்க விதிகளின் 5ன் படி சங்கத்திற்கு மட்டும் தான் மாற்றம் செய்ய முடியும் அல்லது அரசாங்கத்திடம் ஒப்படைக்கலாம்.

2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.